# மாதிரி விடைகள்

# SUGGESTED SOLUTIONS

## KE4 – Processes, Assurance & Ethics

**March 2015**



All Rights Reserved

**பகுதி (1a)**

1.1

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள் 1.1.1 |
|---|
| விடை: C |

1.2.

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 1.2.4 |
|---|
| விடை: D |

1.3

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 1.9.1 |
|---|
| விடை: D |

1.4

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 2.1.2 |
|---|
| விடை: D |

1.5

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 2.5.1 |
|---|
| விடை: A |

1.6

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 3.2.1 |
|---|
| விடை: C |

1.7.

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 4.1.1 |
|---|
| விடை: D |

1.8.

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 5.1.1 |
|---|
| விடை: A |

1.9

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 5.2.1 |
|---|
| விடை: C |

1.10

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 5.5.1 |
|---|
| விடை: A |

**ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம். மொத்தம் 20 புள்ளிகள்.**

**தெரிவு (1b)**

1.11

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 1.4.1 |
|---|
| (i) இடர் மதிப்பீடு. இடரை அடையாளப்படுத்தல் மற்றும் தனிநபர் கணிப்பீடு.<br>(ii) இடர் பிரதிபலிப்பு / இடரைக் கையாளல் - இடரை நிர்வகிக்க மிகச் சிறந்த முறையினை முடிவுசெய்தல்.<br>(iii) கண்காணிப்பும் மீழாய்வும். |

1.12.

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 1.7.1 |
|---|
| 1. உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள திறமையும் இடர் உணரும் தன்மையும் முகாமையிலுள்ள ''மேலிடத்தின் குரல்'' (இயக்குனர் குழு மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள்) பலவீனமாக இருந்தால், உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள செயற்றிறமையானது பாதிப்படையும்.<br>2. உள்ளகக் கட்டுப்பாடுகள் செயற்பாட்டு இடர்களைக் குறைப்பதற்கு உதவலாம், இருப்பினும் அவைகள் செயற்பாட்டுக் குறைபாடுளைத் தடுப்பதற்கு முடியாமற் போகலாம்.<br>3. கட்டுப்பாட்டு வடிவமைப்புகள் குறைபாடுள்ளதாயிருக்கலாம், அதன்விளைவாக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு நன்மை/களைக் கொடுக்க முடியாது போகலாம்.<br>4. அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த முடியாது போகலாம்.<br>5. சுூழலில் ஏற்படும் விரைவான மாற்றங்களால் புதிய இடர்கள் எழலாம். இருப்பினும், பயன்பாட்டிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் அவ்வகையான சந்தர்ப்பங்களைக் கையாள்வதை விரைவுபடுத்தாமற் போகலாம்.<br>6. கட்டுப்பாட்டு நடைமுறைமையின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைமைப்படுத்தலில் ஏற்படும் செலவீனமானது திறள் நன்மைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம்.<br>7. மனிதத் தவறுகள்.<br>8. ஊழியர்கள் மற்றும் மோசடிகளுக்கிடையே ஏற்படும் கூட்டு.<br>9. முகாமையால் கட்டுப்பாடுகளை நீக்குதல். |

1.13

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 2.3.1 |
|---|
| 1. முற்பணத் தொகையினைப் பொறுத்து முடிவெடுக்கவும்.<br>2. ஒரு சில்லறைக் காசாளரை நியமிக்கவும்.<br>3. வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை மீழப்பெறுவதற்கு ஒரு முறையான கோரிக்கையை வைக்கவும்.<br>4. வங்கிக் கணக்குகளுக்குப் பொறுப்பான கணக்காளர் பணத்தினை மீழப்பெற |

| | |
|---|---|
| | வழிசெய்வார். |
| 5. | வங்கியிலிருந்து பணத்தினை எடுத்தவுடன் அதைச் சில்லறைக் காசுப் பெட்டியில் அல்லது காப்புப் பெட்டகத்தில் வைக்கவும். |
| 6. | பணம் மீழப்பெறுவதனை கணக்குப் பதிவேட்டில் பதிவுசெய்யவும். |
| 7. | சில்லறைக் காசு வரவு மற்றும் செலவுகளைப் பதிவு செய்யக் கணக்கியல் முறைமையினை கணக்கினை உருவாக்கவும். |
| 8. | சில்லறைக் காசுப் புத்தகத்தில் பதியப்படும் சில்லறைக் காசுச் செலவீனங்கள் சில்லறைக் காசு ரசீதினாலும் ஆவணங்களாலும் ஆதாரப்படுத்தல் வேண்டும். |

1.14.

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 2.3.2 |
|---|
| 1. தகுதிவாய்ந்த சில்லறைக் காசுச் சான்றுச்சீட்டின் ஆதாரமல்லாது பணம் அகற்றல் / செலவு செய்தல். |
| 2. தகுதிவாய்ந்த சில்லறைக் காசு சான்றுச்சீட்டில் குறிப்பிட்ட தொகையைவிட அதிகமாகக் கொடுப்பனவு செய்தல். |
| 3. தொலைந்துபோன சில்லறைக் காசுச் சான்றுச்சீட்டு. |
| 4. ஆற்றல்வாய்ந்த திருட்டுக்கள். |
| 5. தொலைந்துபோன IOU. |
| 6. மிகையான சார் வேறுபாடுகள். |

1.15

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 3.1.1 |
|---|
| (i) இடர்கள் முறையாகக் கணிப்பிடாமை. இதன் விளைவாக கட்டுப்பாட்டின் தேவைகள் அங்கீகரிக்கப்படாமை. |
| (ii) வழமையான செயற்பாடுகளுக்கேயன்றி வழமைமற்ற செயற்பாடுகளுக்காக இடர்கள் அங்கீகரிக்கப்பட்டமை. இதனால் வழமையற்ற சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான கட்டுப்பாடுகள் இல்லாது போதல். |
| (iii) கட்டுப்பாடுகள் தானியங்குச் செயற்பாடல்லாது மனிதர்களின் பதிலினை எதிர்பார்த்தல். மனித நடவடிக்கைகள் மூலம் செயற்படும் கட்டுப்பாடுகளைவிட தானியங்கிச் செயற்பாடானது அதிக பலனுள்ளதாகும். |
| (iv) கட்டுப்பாட்டின் அளவீடானது அதன் நோக்கத்தினை அடையப் போதாது இருத்தல். |

1.16

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 3.3.1 |
|---|
| - கம்பனியின் அங்கிகரிக்கப்பட்ட விலைப்பட்டியலுக்கான நுழைவு அனுமதியானது கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்போது, அங்கிகரிக்கப்பட்ட நபர்கள் மாத்திரம் அங்கிகரிக்கப்பட்ட விலைக்கு அனுமதியளிக்கப்படுவர்.<br>- இது அங்கிகரிக்கப்படாத திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் அங்கிகரிக்கப்பட்ட விலைகளில் ஏற்படுத்துவதைத் தவிர்க்கும்.<br>- இது சரியான விலையில் விற்பனை நடந்ததை உறுதிப்படுத்தும், மற்றும் எவருமே விலைப்பட்டியலை உருவாக்கித் தவறான விலையினைத் தேர்ந்தெடுக்க முடியாது.<br>- இது இரகசியமான தகவல்களை உத்தரவாதமளிக்கப்படாதவர்கள் கையாள்வதைத் தவிர்க்கும். |

1.17

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 3.4.1 |
|---|
| பின்வருவன பரீட்சாத்தியால் கொடுக்கப்பட்டிருக்கும் குறைபாடுகளுக்கான உதாரணங்களாகும்:<br>• கொள்வனவு நடைமுறையினைப் பின்பற்றாது அங்கிகரிக்கப்படாத கொள்வனவு ஆணையின் மூலம் பொருட்கள்/சேவைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல்.<br>• விபரக் குறிப்பீடுகள், தரம், மற்றும் அளவு/வெளியீடு என்பனவற்றைச் சரிபாராது பொருட்கள்/சேவைகள் என்பவற்றைப் பெறுதல்.<br>• பொருட்கள்/சேவைகள் என்பவற்றைப் பெற்றதற்கான எவ்வித ஆதாரமுமில்லாது வழங்குனருக்கு பணத்தினை வைப்புச்செய்யல்.<br>• பொருட்கள்/சேவைகள் வாங்குவதற்கான ஆணை மற்றும் அங்கீகாரம் என்பவற்றுக்கான தனியான பணிகள் ஒழுங்காகக் கொடுக்கப்படாமை.<br><br>மேற்கொடுக்கப்பட்டவைகள் ஒரு முழுமையான பட்டியலல்ல. |

1.18

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 4.2.2 |
|---|
| 1. வெளிப்படுத்தல்கள் சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டது மற்றும் வாடிக்கையாளர் அல்லது தொழிலாளர்களால் அங்கிகாரமளித்தல்.<br>2. வெளிப்படுத்தல்கள் சட்ட ரீதியாகத் தேவைப்படுகின்றனளூ உதாரணமாக சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக ஆவணங்கள் அல்லது சாட்சிகளை வழங்குதல்.<br>3. நடைமுறையிலுள்ள அல்லது சந்தேகத்துக்குரிய பணப் பரிமாற்றம் அல்லது பயங்கரவாதத்திற்காக நிதியளித்தல் போன்றவற்றுக்காக வெளிப்படுத்தல்கள் சட்ட ரீதியாகத் தேவைப்படுதல்.<br>4. தொழில் ரீதியான உரிமை அல்லது கடமை என்பவற்றினூடாகத் தகவல்களை வெளிப்படுத்தல், அது பொதுநலனுக்காகவேயன்றி சட்டத்தால் தடை செய்யப்பட்டதல்ல.<br>* தொழில் ரீதியான அமைப்பால் தர மீழாய்விற்கு இணங்குதல்.<br>* ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அமைப்பால் ஒரு விசாரணைக்காகப் பதிலளித்தல்.<br>* தொழில் ரீதியான நன்மைகளுக்கான தொழில் ரீதியான கணக்குகளைப் பாதுகாக்க சட்ட ரீதியான முன்னெடுப்புகளுக்கு. |

1.19

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 5.1.2 | |
|---|---|
| 1. | **உத்தேசப் பாவனையாளர்கள்.** இவர்கள் உத்தரவாத அறிக்கையினை உபயோகிக்கும் நபர் அல்லது நபர்கள் அல்லது நபர்களின் கூட்டம். |
| 2. | **பொறுப்புவாய்ந்த தரப்பினர்** எனப்படுபவர் விடயங்கள் அல்லது விடையத் தகவல்களுக்குப் பொறுப்பான நபர் அல்லது நபர்கள். இவர்களே உத்தரவாத நடவடிக்கைககளை நடாத்துவதற்கு செயற்படுபவர்கள். |
| 3. | **தொழில் நடாத்துனர்** எனப்படுபவர் குறிப்பிட்ட தொழிலை நடாத்தி விடயங்கள் மற்றும் உத்தரவாதத்தினை அளிப்பவர்கள். |

1.20

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 5.3.1 | |
|---|---|
| - | கணக்காய்வு நடைமுறையின் தன்மை, நேரம், மற்றும் வரையறை என்பனவற்றைத் தீர்மானித்தல். அதாவது கணக்காய்வில் எந்தளவிற்கான வேலைகள் நடந்துள்ளன என்று அறிதல். |
| - | போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெறப்பட்டதாவென மதிப்பிடல். |
| - | பிரயோகிக்கத்தக்க நிதி அறிக்கையிடல் சட்டகத்தின் பிரயோகத்தன்மையை முகாமையின் மதிப்பிடலுடன் கணித்தல். |
| - | பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் முடிவுகளைப் பெறல்ளூ ஒரு கணக்காய்வு அபிப்பிராயத்தினை அடைதல் (அபிப்பிராயத்தினை உருவாக்க எவ்வாறு முக்கியத்துவமான விடையங்களைக் கருத்திற் கொள்ளல் வேண்டும்) |

**ஒவ்வொரு வினாவுக்கும் 3 புள்ளிகள் வீதம். மொத்தம் 30 புள்ளிகள்.**

# பகுதி 2

**விடை 02**

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 1.6.1 |
|---|

1 உள்ளகக் கட்டுப்பாடுகள் முக்கியமானவை:

- எல்லா வியாபார நிறுவனங்களுக்கும் இடர்கள் உள்ளன (உதாரணம்: மோசடி இடர்கள், விடுபடல் மூலமான இடர்கள், செயன்முறை இடர்கள்). கட்டுப்பாடுகள் செயற்படுத்தப்படுமிடத்து வியாபார நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றின் இடர்கள் குறையும்.
- கட்டுப்பாடுகள் சட்டம், நிறுவனத்துக்காகப் பொருந்தக்கூடிய ஒழுங்கு விதிகள் என்பனவற்றுடன் ஒத்துப்போகும்.
- கட்டுப்பாடுகள் வியாபாரச் செயற்பாட்டின் செயற்றிறன் அல்லது வினைத்திறன் என்பனவற்றில் ஏற்படும் இழப்புகளுக்கான இடரைக் குறைத்து, நிறுவனத்தின் கொள்கை மற்றும் நோக்கம் என்பனவற்றுடன் ஒத்துப்போகும்படி நடவடிக்கைகள் இருப்பதை உறுதிப்படுத்தும்.
- கட்டுப்பாடுகளானது நிறுவனத்தின் திட்டங்களால் நடைமுறைப்படுத்தப்படும் நிதித் தகவல்கள் என்பனவற்றின் நம்பகத்தன்மையையும் துல்லியத்தையும் உறுதிப்படுத்தும்.
- சொத்துக்களையும் பாதுகாக்கப்பட்ட தகவல்களையும் உறுதிப்படுத்தும்.
- மோசடிகள் இடம்பெற்றால் தடுக்கப்படும் அல்லது கண்டுபிடிக்கப்படும்.

2

- இது மோசடிகளால் ஏற்படும் இடரைக் குறைக்கும் மற்றும் நிறுவனத்திலுள்ள வேறு நபர்களால் சரிபார்க்கப்படும்போது யாரால் நடவடிக்கைகளில் தவறுகள் அல்லது விடுபடுதல் ஆரம்பிக்கப்பட்டது என்பதனைக் கண்டுபிடிக்கலாம்.
- ஒரு தனிநபரால் மோசடிகள் செய்வதைக் கடினமாக்கும்.

3

- அதிக பெறுமதியுள்ள இலகுவாக நகர்த்தக்கூடிய சிறிய பொருட்களை பெட்டகத்தினுள் பு‘ட்டி வைத்தல் வேண்டும்.
- முகாமையானது உள்ளகக் கண்காணிப்புக் கமராக்களை வைத்திருத்தல் (CCTV) மற்றும் சேமிப்புக் கிடங்குகளைக் கண்காணித்தல் (ஆனால் இது செலவு கூடியது).
- இவ்வகையான பொருட்களின் நகர்வினைக் கண்காணிக்க ஒரு நபரின் பொறுப்பில் விடுதல், அப்பொருட்களின் ஏற்படும் பற்றாக்குறைகளுக்கு அவரே பொறுப்பாகவும் நியமிக்கலாம்.
- காப்புறுதி பெறுவதற்கான அனைத்துத் தேவைகளையும் செயற்படுத்தல்.
- அடிக்கடி இருப்பினைச் சரிபார்த்தல்.

***(நடைமுறைச் சாத்தியமான வேறு விடைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்)***

4 கணித மற்றும் கணக்கீட்டுப் பதிவேட்டின் கட்டுப்பாடுகளின் நோக்கமானது வணிக நடவடிகடகைகளின் துல்லியப் பதிவினையும் செய்முறைகளையும் சரிபார்ப்பதேயாகும். உதாரணமாக, பொதுப் பேரேட்டுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்ட விற்பனைப் பேரேடு ஒரு கணித மற்றும் கணக்கீட்டுக் கட்டுப்பாடாகும், மற்றும் இது விற்பனைப் பேரேட்டிலுள்ள பதிவுகளின் துல்லியத்தையும் முழுமையையும் உறுதிப்படுத்தும்.

## விடை 03

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 5.5.2; 5.5.3 |
|---|

1. வெளிக்கடையொன்றின் சரக்கிருப்புக் கணக்கியல் சான்றைப் பெறுவதற்கான பின்வரும் எவ்வழிகள் உபயோகப்படுமென **விளக்குக.**

   **i. பரிசோதனை**

   அக்கடையின் சரக்கிருப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேர்வுசெய்யப்பட்ட சில பொருட்களின் இருப்பானது பரிசோதனை மூலமாகக் கணிப்பிடலாம். இருப்பில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துப் பொருட்களைப் பரிசோதனை செய்வதன்மூலம் முழுமையாகப் பரிசோதித்ததற்கான சாண்றாகலாம். சரப்பிருப்புப் பதிவுகளை ஆராய்வதும் மதிப்பீட்டின் துல்லியத்தினையும், உரிமையினையும், கடமையினையும் மற்றும் பரிவர்த்தனைகள் சரியான கணக்கியல் காலத்தில் நடைபெற்றுள்ளனவா என்பதற்கான சான்றுகளையும் ஆராய்வதன்மூலம் காணலாம்.

   **ii. கண்காணித்தல்**

   சரக்கிருப்பின் பொதுவான நிலமை மற்றும் எவ்வகையான நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என்பவற்றினைக் கண்காணித்தல் அல்லது சரக்கிருப்பில் எவ்வாறு செயன்முறைகள் அல்லது நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்பதனைக் கண்காணித்தல். இவை சரக்கிருப்பு நடவடிக்கைகளில் கணக்காய்வுச் சான்றுபெறும் நேரங்களில் எவ்வகையான நிலமைகள் இருந்தனவென்பதை சான்றுபகரும். சரக்கிருப்பு நிலுவையினைப் பரிசோதித்தல்.

   **iii. மீழ்கணிப்பீடு**

   சரக்கிருப்புப் பற்றுச்சீட்டுகள், பிரச்சனைகள் மற்றும் மாற்றங்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் கால முடிவில் சரக்கிருப்பு மிகுதிப் புத்தகத்தினை மீழ்கணிப்பீடு செய்வதற்காகப் பிரித்தெடுக்கப்படலாம். இவை சரக்கிருப்பு மீதியின் துல்லியத்தினை வழங்கத் துணைபுரியும். சரக்கிருப்புக் கணிப்பீட்டினை மேற்கொண்ட முறைமையின் துல்லியத்தினை உறுதிப்படுத்த மீழ்கணிப்பீடு மூலம் சரிபார்க்கலாம்.

2. கட்டுப்பாட்டுச் சோதனைகளின் பொருளினை **விளக்குக.**

   **கட்டுப்பாட்டுச் சோதனைகளென்பது** நிதிக்கூற்று வலியுறுத்தப்படும் நிலையில் ஏற்படும் பொருட்களின் தவறான கூற்றுக்ககளைத் தடுக்க அல்லது கண்டுபிடித்துச் சீர்செய்ய நிறுவனத்தினால் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட மதிப்பீடுகளாகும்.

## விடை 04

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 2.2.2; 2.2.3 |
|---|

1 வேலையாட்களின் வருகையினைப் பதிவுசெய்வதற்கான முக்கியத்துவங்கள்:

- மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு, வருகைச் சலுகைகள் மற்றும் சம்பளமற்ற லீவுகளுக்கான கழிவுகள் என்பன வருகைப் பதிவேட்டிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. ஆகவே, வருகைப்பதிவேட்டுப் பதிவுகள் முக்கியமானது. இது கொடுப்பனவுகள் கம்பனியில் வேலை செய்வோருக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும்.

2 சுவிப் அட்டைகளை வருகைப்பதிவுக்காக உபயோகிக்கும்போது, அதன் உரிமையாளரல்லாத வேறெருவரும் உரிமையாளருக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இது ஒரு பிழையான கையாளலாகும், இதனட விளைவானது நேரம் பிழையாகப் பதிவுசெய்யப்படும்.

3 மனித முகாமைத்துவப் பகுதியின் நடவடிக்கையானது முழுமையானதும் துல்லியமானதுமான சம்பளக் கொடுப்பனவை உறுதிப்படுத்துதலாகும்:

(i) சம்பளக்கொடுப்பனவைத் தயாரிப்பதற்கு புதிதாக வேலையில் சேர்ந்தவர்களின் விபரங்களை மிகத் துல்லியமாகப் பராமரித்து சரியான நேரத்திற்குக் கொடுத்தல் வேண்டும்.

(ii) மனிதவளப் பிரிவு நேரப் பதிவுகளை வைத்திருந்தால் அவற்றினைச் சரிபார்த்து சம்பளக்கொடுப்பனவைத் தயாரிப்பதற்கு வழங்கவேண்டும்.

(iii) வேலையிலிருந்து விலகியவர்களின் விபரங்கள் புதுப்பிக்கப்பட்டு அவ்விபரங்கள் சம்பளக்கொடுப்பனவைத் தயாரிப்பதற்கு அனுப்பப்பட்டு அவ்வகையானவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாததை உறுதிப்படுத்ததுதல் வேண்டும்.

(iv) சம்பளத்தில் ஏற்படும் மாற்றங்கள் (உதாரணமாக சம்பள அதிகரிப்பு) துல்லியமாக மனிதவளப் பிரிவில் பராமரிக்கப்பட்டு / புதுப்பிக்கப்பட்டு சம்பளக்கொடுப்பனவைத் தயாரிப்பதற்கு தெரியப்படுத்தல் வேண்டும்.
இது குறிப்பிடுவது என்னவெனில், மனிதவளப் பிரிவு பதிவுகளைப் புதுப்பித்து அவற்றின் துல்லியத்தினை உறுதிப்படுத்தி அவை அதிகாரமளிக்கப்படாதவர்களால் மாற்றங்கள் செய்யப்படாததையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4 மாதாந்தச் சம்பளப்பட்டியல் முரண்பாட்டு நீக்கலின் நோக்கங்களாவன:

a. ஊழியர்களுக்கு முறையாகச் ஊதியம் கொடுக்கப்படல், முறையற்றவர்கள் நீக்கப்படல்.
b. சம்பளப்பட்டியல் செலவீனங்கள் பொருத்தமான கணக்குப் பட்டியலுக்குச் உபயோகித்தல்.
c. வரிகள் உள்நாட்டு இறைவரிக்குச் செலுத்தப்படல் மற்றும் சரியாக அறிக்கைப்படுத்தல்.
d. அனைத்து EPF, PAYE, சங்கங்கள், கடன்கள் போன்ற ஒழுங்குபடுத்தப்பட்ட நிபந்தனைகளும் கழிக்கப்பட்டு செலுத்தப்படல்.
e. வரவு செலவுத் திட்டத்திற்கமைய துறைகளின் சம்பளங்களின் முரண்பாடுகள் நீக்கப்படல்.

**விடை 05**

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 4.2.1; 4.2.3 | |
|---|---|
| 1 | ஏன் ஒழுக்கவியல் நடத்தையானது கிகானுக்கு முக்கியமாகவுள்ளது?<br><br>• கிகான் கணக்கியலைத் தொழிலாகக் கொண்டவர், அவர் தொழிலில் ஒழுக்கவியலைக் கடைப்பிடிப்பதை முன்னிறுத்துபவர்.<br><br>• அவர் நிதி அறிக்கையினை செய்கின்றபடியால், அங்குள்ள பாவனையாளர்கள் அவ்வறிக்கையினைப் பிரயோகித்து அதனடிப்படையில் முடிவுகளை எடுப்பர். விஷேடமாக கிகான் பொதுச் சேவை நிறுவனங்களில் வேலை செய்பவர், அதனால் அங்கு பரந்தளவிலான நிதி அறிக்கைப் பாவனையாளர்கள் உள்ளனர். ஆகவே, அங்கு துல்லியமான நிதி அறிக்கையினைத் தயாரிப்பது கிகானின் பொறுப்பாகின்றது.<br><br>• நிதியறிக்கைகள் நேர்மையாகத் தயாரித்தல் வேண்டும், காரணம் வரி செலுத்துதுலும் அதனிலேயே தங்கியுள்ளது. ஆகவே கிகானின் ஒழுக்கவியல் நடவடிக்கைகளானது பொதுநலனை பாதுகாக்கும் சேவையிலுள்ளது.<br><br>• கிகான் தொழிலில் தகுதி வாய்ந்தவராகக் காணப்படல் வேண்டும் மற்றும் அவர் கணக்காளராக இருப்பதால் ஊழியர்கள் அவரின் வேலையில் தங்கியிருப்பதால் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். |
| 2 | கிகானின் வருடாந்த ஊக்க ஊதியமானது கம்பனியின் இலாபத்திலேயே தங்கியுள்ளது. வசு‘லில் தொய்வு ஏற்பட்டால் இலாபம் குறையும் அதனால் ஊக்க ஊதியமானது பாதிக்கப்படும் என்பது அவருக்குத் தெரியும். அவர் சரியான முடிவுகளை எடுத்தல் வேண்டும், ஆனால் அவரது அக்கறையினால் அவை தடைப்படுகின்றன. இது ‘‘தனிப்பட்ட அக்கறை’’ எனப்படும். அவரது நிதி நன்மைகளால் வசு‘லில் தொய்வு ஏற்படும் விடயங்களில் அவர் முடிவெடுக்க மாட்டார். |
| 3 | கிகானுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு:<br><br>கிகான் இவ்விடையத்தில் ஒழுக்கவியல் நடவடிக்கைகளில் கவனஞ்செலுத்த வேண்டும். அவர் தனது நிதி இலாபங்களை மறந்து அவரது கடமையினைச் செய்தல் வேண்டும். |
| 4 | - ஒருமைப்பாடு<br>- நோக்கம்<br>- தெழில்சார்ந்த நடவடிக்கைகள்<br>***(“இரகசியத்தன்மை” சேர்க்கப்பட்டிருந்தால் ஒரு புள்ளி வழங்கலாம்)*** |

# பகுதி 3

**விடை 06**

| பொருத்தமான கற்றல் வெளிப்பாடு/கள்: 2.4.1 |
|---|

1 குறிப்பிடப்பட்ட தேவைக்குரிய பணமானது வரையறுக்கப்பட்டுள்ளதால், முகாமையானது ஒரு வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரிக்கலாம். அது மூலதனச் செலவீன வரவுசெலவுத் திட்டம் எனப்படும். அது ஒரு திட்டமிடல் சட்டகமாகும், மற்றும் வரவுசெலவுத் திட்டமானது வரையறுக்கப்பட்ட நிதியானது பயனள்ளதாகச் செலவு செய்யப்படுகின்றதாவென உறுதிப்படுத்த கண்காணிக்கப்படும். இது ஒரு உறுதிசெய்யப்பட்ட மூலதனச் செலவீனத்திற்கான முறையான நடைமுறையாகும்.

2 ஒரு ஒப்பந்தக்காரரைத் தெரிவுசெய்யப் பின்பற்றும் நடைமுறை:

- கம்பனியானது வளமும் சேவையை வழங்கக்கூடிய திறனுமுடைய அதிகளவிலான ஒப்பந்தக்காரர்களை இனங்கண்டு அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரலுக்கு ஆர்வமாயுள்ளனராவென வினவ வேண்டும். (ஆர்வக் கருத்துத் தெரிவிப்பு மற்றும் திட்ட முன்மொழிவு என்பனவும் பின்பற்றப்படல் வேண்டும்)
- சேவை வழங்க ஒப்பந்தப்புள்ளி கோரலுக்கு இணக்கம் தெரிவித்கும் வழங்குனர் விபரக்குறிப்புகள், கட்டுவதற்குத் தேவையானவற்றின் விபரங்கள் என்பனவற்றைக் குறிப்பிடல் வேண்டும். (அது பொதுவாக உயர்மட்ட கட்டடக்கலை வடிவமைப்பு, அமைப்பு மற்றும் உயர்மட்ட விபரக்குறிப்புகள் என்பனவாகும்).
- ஒவ்வொரு வழங்குனரும் விலைகோரல் அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரல் என்பன கேட்கப்பட்டு மற்றும் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியும் கொடுக்கப்படும்.
- ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி கோரலுக்கும் ஒப்பந்தப் புள்ளிக்காரரும் சேவையினை சரியான நேரத்திற்கும் விபரக்குறிப்பிற்கேற்றவாறு வழங்குவதற்கான தமது திறமையினைக் காட்டல் வேண்டும்.
- ஒப்பந்தப்புள்ளிக்காரரின் விலைகோரல் அல்லது ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பிடப்பட்டு விலைக்கொரலின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிக்காரர் தெரிவுசெய்யப்படுவார்.
- ஒப்பந்தப்புள்ளிச் செயல்முறைக்குப் பொறுப்பான தொடர்புடைய அதிகாரி அல்லது ஒப்பந்தப்புள்ளிக்கான குழுவால் ஒப்பந்தப்புள்ளிக்காரர் பரிந்துரைக்கப்படுவார், ஆனால் இறுதி முடிவானது முகாமையின் தகுந்தவர்களாலேயே எடுக்கப்படும் (உதாரணம் இயக்குனர் குழுமம்).
- குறைந்தளவு விலை கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்காரர் தெரிவு செய்யப்படாவிடில் முடிவானது நியாயப்படுத்தப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும் மற்றும் அது பதிவுசெய்யப்படலும் வேண்டும்.

3 **ஒரு நிலையான சொத்துப் பதிவேட்டின் நன்மைகள் (FAR)**

(i) அது FARஇல் சேர்க்கப்பட்டிருந்தால் அதன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தல் சுலபம்.

(ii) கம்பனிக்கு நிலையான சொத்துக்களைப் பௌதீகரீதியாகச் சரிபார்த்தலுக்கு உதவும்.

(iii) கணக்காளருக்கு சொத்துகள் அகற்றப்பட்டிருந்தால் இலாப நட்டத்தினைக் கணிக்க உதவும். தனிப்பட்ட தற்போதைய அல்லாத சொத்துக்களின் விரிவான பதிவுக்கு உதவும்.

(iv) கணக்கியல் அமைப்பில் தற்போதைய அல்லாத சொத்துக்களின் விரிவான பதிவின் துல்லியத்தினைச் சரிபார்க்க ஒரு பதிவினைக் கொடுக்கும்.

(v) மாதிரி மற்றும் தொடரெண்கள் போன்ற நிதியல்லாத விபரங்களைப் பெற உதவும்.

4 FARஇல் பதிவு செய்யப்படவேண்டிய தரவுகள்:

- சொத்தின் உள்ளக குறிப்பெண்
- உற்பத்தியாளரின் தொடரெண்
- சொத்தின் விபரம்
- சொத்தின் பௌதீக அமைவிடம்
- சொத்தை வைத்திருக்கும் துறை
- வாங்கிய திகதி
- கொள்முதல் விலை
- தேய்மான முறை, உபயோகக் காலம்
- திரட்டிய தேய்மானம்
- பொருளின் இலக்கம் மற்றும் தொடரிலக்கம்
- அகற்றல் நடவடிக்கைகள்

**5** FARஇல் இருந்து சொத்தினை அகற்றும் நிகழ்வுகள்

- விற்பனையின் போது, வழங்குனரால், நன்கொடை, எதிர்பார்த்தல், பொருட்த்தேவைகள் என்பவற்றால் சொத்தினை அகற்றல்
- சொத்து களவு போதல்
- சொத்து அழிதல் அல்லது இழத்தல்

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளு அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.